சென்னையில் டெங்கு காய்ச்சலுக்கு மேலும் இருவர் உயிரிழப்பு?

சென்னை, அக். 30: சென்னையில் டெங்கு காய்ச்சலுக்குள்ளாகி மேலும் இருவர் உயிரிழந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதிப்பு தீவிரமடைந்து கடைசி நேரத்தில் கவலைக்கிடமான நிலையில் இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் காரணமாகவே அவர்களை காப்பாற்ற இயலவில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அம்பத்தூரை அடுத்த அயப்பாக்கத்தைச் சேர்ந்தவர் பூஜா (30). இவருக்கு கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு தீவிர காய்ச்சல் பாதிப்பு இருந்ததாகத் தெரிகிறது. நிலைமை கவலைக்கிடமாகவே, போரூரில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அவர் அண்மையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பரிசோதனையில்டெங்குகாய்ச்சல் உறுதியான நிலையில், அவருக்கு உள்ளுறுப்புகளில் ரத்தக் கசிவும், கிருமித் தொற்றால் ஏற்படும் குறை ரத்த அழுத்த பாதிப்பும் (செப்டிக் ஷாக்) இருந்துள்ளது. இதையடுத்து தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அதேபோன்று பூந்தமல்லியைச் சேர்ந்த ராஜ் பாலாஜி (15) என்ற பத்தாம் வகுப்பு மாணவர், டெங்கு காய்ச்சலுக்காக கடந்த 29-ஆம் தேதி மாலை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தீவிர காய்ச்சல் மற்றும் செப்டிக் ஷாக் பாதிப்புக்குள்ளான அவருக்கு உயர் மருத்துவக் கண்காணிப்பு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இருப்பினும், கிருமித் தொற்று தீவிரமடைந்த நிலையில் அன்றைய தினம் இரவே அந்த மாணவர் உயிரிழந்தார்.

இவர்கள் இருவரது உயிரிழப்புக்கும் டெங்கு காய்ச்சல்தான் பிரதான காரணமா என்பதை மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில் ஆய்வு செய்து வருவதாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் கூறியதாவது:

தமிழகத்தில் பருவ மழைக் காலம் தீவிரமடைந்துள்ள நிலையில், கொசுக்களால் பரவும் நோய்கள் அதிகரித்துள்ளன. தொடர்ந்து மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருக்கும்பட்சத்தில் கட்டாயம் மருத்துவரின் பரிந்துரையுடன் ரத்தப் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு அல்லாமல் தன்னிச்சையாக மருந்துகளை வாங்கி உட்கொள்ளக் கூடாது. அதேபோன்று மருத்துவரை அணுகாமல் வீட்டிலேயே சுய மருத்துவம் மேற்கொள்ளுதல் கூடாது. உரிய நேரத்தில் சிகிச்சை பெறாமல் அலட்சியப்படுத்தும்போதுதான் டெங்கு வைரஸ் உடலில் தீவிர பாதிப்பை ஏற்படுத்தி உயிரிழப்புக்கு வழிவகுக்கிறது என்றார் அவர்.

சென்னையில் தொடர் மழை: பல இடங்களில் போக்குவரத்து நெரிசல்

சென்னை,அக்.30: சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் திங்கள்கிழமை பெய்த மழையினால், பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் திங்கள்கிழமை காலை முதல் மாலை வரை விட்டு விட்டு மிதமான மழை பெய்தது. இதனால் சாலையில் பல இடங்களில் மழை நீர் தேங்கியது.

இதன் காரணமாக சென்னை நகரின் சில இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. முக்கியமாக, அண்ணாநகர் திருமங்கலம், கோயம்பேடு, ஈக்காட்டு தாங்கல், கிண்டி, நந்தனம், வடபழனி, அரும்பாக்கம், வேளச்சேரி, நந்தம்பாக்கம், ஐயப்பன்தாங்கல், அம்பத்தூர், ஆவடி போன்ற பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்தை சந்தித்தனர். காலையில் பணிக்குச் சென்றவர்களும், மாலையில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்களும் கடும் சிரமத்தைச் சந்தித்தனர்.

சென்னையில் திங்கள்கிழமை பெய்த மழையில் நந்தம்பாக்கம் சாலையில் தேங்கிய நீரில் ஊர்ந்து சென்ற வாகனங்கள்.

புறநகர் மின்சார ரயில்கள் இன்று ரத்து: கூடுதலாக மெட்ரோ ரயில்கள் இயக்கம்

சென்னை,அக்.30: சென்னையில் புறநகர் மின்சார ரயில் சேவை நிறுத்தம் காரணமாக செவ்வாய்க்கிழமை (அக்.31) ஒரு நாள் மட்டும் கூடுதலாக மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திங்கள் கிழமை வெளியிட்ட செய்தி: தாம்பரம் மற்றும் கடற்கரை இடையேயான மின்சார ரயில் சேவை செவ்வாய்க்கிழமை(அக்.31) காலை10.18 மணி முதல் பிற்பகல் 2.45 மணி வரை நிறுத்தப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதனால் பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறைப்பதற்கும், பயணிகளின் வசதிக்காகவும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கூடுதலாக ரயில் இயக்க முடிவு செய்துள்ளது.

இதன்படி விம்கோ நகர் பணிமனை முதல் விமான நிலையம் வரை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை 6 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். அதேபோல், அறிஞர் அண்ணா ஆலந்தூர் முதல் வண்ணாரப்பேட்டை வரை காலை 8 முதல் 11 மணி வரை மற்றும் மாலை 5 முதல் இரவு 8 மணி வரை 3 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

மேலும், அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் முதல் சென்ட்ரல் வரை காலை 8 முதல் இரவு 8 மணி வரை 6 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை 12 நிமிஷ இடைவெளியிலும், சென்ட்ரல் முதல் விமான நிலையம் வரை(கோயம்பேடு வழியாக) காலை 8 முதல் இரவு 8 மணி வரை 12 நிமிஷ இடைவெளியிலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை

அதிகாரிகளுக்கு மேயர் ஆர்.பிரியா அறிவுறுத்தல்

சென்னை, அக்.30: 'மக்களைத் தேடி மேயர்' சிறப்பு முகாம் மூலம் பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என அதிகாரிகளுக்கு மேயர் ஆர்.பிரியா அறிவுறுத்தினார்.

மக்களைத்தேடி மேயர் சிறப்பு முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சென்னை மாநகராட்சி கூட்டரங்கில் திங்கள்கிழமை நடைபெற்ற அதிகாரிகளுடனான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற மேயர் ஆர்.பிரியா பின்னர் பேசியதாவது:

மக்களைத்தேடி மேயர் திட்டம் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது தொடர்புடைய துறைகள் சார்ந்த அலுவலர்களுடன், மாநகராட்சி அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

ராயபுரம் மண்டலத்தில் மே.30-இல் நடைபெற்ற முகாம் மூலம் பெறப்பட்ட 333 மனுக்களில் 331 மனுக்கள் மீதும், திரு.வி.க.நகர் மண்டலத்தில் மே.31-ஆம் தேதி பெறப்பட்ட 241 மனுக்களில் 190 மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், அடையாறு மண்டலத்தில் ஜூலை 5-ஆம் தேதி பெறப்பட்ட 315 மனுக்களில் 301 மனுக்கள் மீதும், திருவொற்றியூரில் ஆக.10-ஆம் தேதி பெறப்பட்ட 235 மனுக்களில் 179 மனுக்கள் மீதும், அம்பத்தூரில் அக்.6-ஆம் தேதி பெறப்பட்ட 516 மனுக்களில் 190 மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து மனுக்கள் மீதும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) ஆர். லலிதா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம்களில் மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மேயர் ஆர்.பிரியா தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆய்வு கூட்டம். உடன் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், மற்றும் அலுவலர்கள்.

இலவச மின்சார முறைகேடுகளைத் தடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவு

சென்னை, அக்.30: இலவச மின்சாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மின் வாரிய அதிகாரிகளுக்கு அதன் தலைவர் ராஜேஷ் லக்கானி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் பிறப்பித்த உத்தரவு விவரம்:

தமிழகத்தில் குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. ஒரு மின்விளக்கு மட்டுமே இதில் பயன்படுத்த வேண்டும். இதில் சிலர் முறைகேடு செய்கிறார்கள். மேலும், குடிசை வீட்டை மாடிவீடாக கட்டிய பின்பும் இலவச மின்சாரத்தை சிலர் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. இதுபோன்ற நுகர்வோர்களை கண்டறிந்து அவர்களுக்கு கட்டணப்பட்டியலின் கீழ் மின் கட்டணம் வசூலிக்க வேண்டும். மேலும் வீடுகளுக்கான மின் இணைப்புகளில் பழுதான மீட்டர்களை உடனுக்குடன் மாற்றியமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலவச மின் இணைப்பை முறைகேடாக பிற பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதை தடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும், இது தொடர்பாக ஆய்வு செய்து, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு மட்டும் இலவச மின்சாரம் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அறிவிப்பு sf | சுந்தரம் மியூச்சுவல்

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் அரையாண்டு தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள்

SEBI (மியூச்சுவல் ஃபண்ட்) விதிமுறைகள், 1996 இன் 59வது விதியின்படி, இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 30, 2023 மாதத்துடன் முடிவடைந்த அரையாண்டுக்கான சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள் நிதியின் இணையதளத்தில் www.sundarammutual.com ஹோஸ்ட் செய்யப்பட்டுள்ளது.
முதலீட்டாளர்கள் அதற்கேற்ப இணையதளத்தில் இருந்து முடிவுகளை பார்க்கலாம் அல்லது பதிவிறக்கம் செய்யலாம்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ஆர்.அஜித் குமார்
செயலாளர் & கம்பிளையன்ஸ் ஆபிசர்

இடம்: சென்னை
தேதி: அக்டோபர் 31, 2023

மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஹாடோஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), 044 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
பேக்ஸ்: +91 44 2841 8108. www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, மட்டுமேல் சாலை, சென்னை – 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, முதலீடு செய்வதற்கு முன் திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும். வருமானம் நிச்சயம் அல்லது உத்தரவாதம் இல்லை.

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: ASV ஆதர்ஷ் டவர், 719, பாதாரி ரோடு, எதிரில், அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு-600002.
தொடர்புக்கு: திரு.தியாகராஜன் கைபேசி: 9940516215 & திரு. நந்தகுமார் - கைபேசி : 9894058786

தனிப்பட்ட முறையிலான விற்பனை அறிவிப்பு

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்- நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை, கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் 2002-ன் (SARFAESI சட்டம்) கீழ் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலர் SARFAESI சட்டம் பிரிவு 14-ன் கீழ் 27.08.2019 அன்று கவனத்தில் செய்துள்ளார். எனவே, பொது மக்களுக்கு இதன் மூலம் பரவலாக அறிவிப்பது யாதெனில் நிறுவனத்தின் நிலுவை தொகைகளை திரும்ப பெறும்பொருட்டு நிதி நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளக்படகூடிய விதிமுறைகளின் கீழும் **"உள்ளது உள்ள இடத்தில்", " உள்ளது உள்ளபடி" , "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள படி கடனீட்டு சொத்து தனிப்பட்ட முறையில் விற்பனைக்கு விடப்படுகிறது.

விண்ணப்பதாரர் மற்றும் இணை விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: முத்துசெல்வி. K, எண். 59, மூசா தெரு, திநகர், சென்னை - 600 017. கடன் கணக்கு எண். :**X0HECHE00001660869, மொத்த நிலுவை தொகை : 26.10.2023 அன்று வரை ரூ.10,24,92,184/-** (ரூபாய் பத்து கோடியே இருபத்து நான்கு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து நூற்று எண்பத்து நான்கு மட்டும்) மேலும் அதனுடன் 27.10.2023 முதல் முழு தொகை வசூலாகும் தேதி வரையிலான பின்வட்டி, இடை நிகழ் செலவுகள், தொகைகள், கட்டணங்கள் மற்றும் பல.

சொத்துக்களின் விவரம் : புதிய எண். 59/2, பழைய எண்.25/2, மூசா சேட் தெரு, திநகர், சென்னை என்ற முகவரியில் பைமாஸ் எண்.1145, பிளாக் எண்.130, மறுசர்வே எண்.145/5, டவுன் சர்வே எண். 9117-ன் படி மொத்தமுள்ள 7614 சதுர அடி நிலத்தில் 1/3 பங்கு பிரிக்கப்படாத பங்கு 2538 சதுர அடி நிலத்தில் பின் பகுதியில் முன்புறம் உள்ள தரை மற்றும் முதல் தளத்தில் உள்ள கட்டிடம். எல்லைகள் : வடக்கில் : மூசா தெரு, தெற்கில் : சந்தானம் ஐயங்கார் அவர்களின் சொத்து, கிழக்கில்: பழைய கதவு எண்.24, மூசா சேட் தெரு, மேற்கில்: பழைய எண்.26, மூசா சேட் தெரு.

குறைந்த பட்ச விலை	முன் வைப்பு தொகை	ஏல உயர்வு தொகை	ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம்	முன் வைப்பு தொகை செலுத்த கடைசி தேதி
ரூ.3,47,00,000/-	ரூ. 34,70,000/-	ரூ.1,00,000/-	20-11-2023 11.00 AM to 1.00 PM	17-11-2023 (Up to 5.30 P.M.)

கேட்பு அறிவிப்பு தேதி: 10.01.2018, நிறுவனத்திற்கு தெரிந்த வில்லங்கம் ஏதும் இருப்பின் அதன் விவரங்கள் : "உள்ளது உள்ள படி"

கடனீட்டு சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 9(1) -ன் படி இந்த 15 நாள் விற்பனை அறிவிப்பு உங்களுக்கு விடுக்கப்படுவதோடு கடனீட்டு சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 8 (7)-ன் படி இது கடனீட்டு சொத்தின் பார்வைக்கு படும்படியான பகுதியில் ஒட்டப்பட்டும் உள்ளது. எனவே மேற்கொண்டு உங்களுக்கு இது தொடர்பாக வேறு எந்த அறிவிப்பும் விடுக்கப்படமாட்டாது.
SARFAESI சட்டம் 2002, பிரிவு 13, உட்பிரிவு (8) -ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்க கடன்தாரர் இதன் மூலம் அழைக்கப்படுகிறார். கடனீட்டு சொத்தை தனிப்பட்ட முறையில் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பானது கடனீட்டு சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-ன் கீழான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், உரியது என்பதை நினைவில் கொள்க.

தனிப்பட்ட முறையிலான சொத்து விற்பனைக்கு உரிய நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:
1. தனிப்பட்ட முறையிலான விற்பனையானது "உள்ளது உள்ள இடத்தில்", " உள்ளது உள்ளபடி" , "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் அடிப்படையில் நடத்தப்படும்.
2. கொள்முதல்தாரர் சொத்தை வாங்குவதற்கான தனது விலைக்கோரலை நிறுவனம் ஏற்றுக்கொண்ட தகவல் வரப்பெற்றதற்கு அடுத்த வேலை நாளில் விற்பனை விலையில் 25 % தொகையை முன் பணமாக செலுத்துவதோடு எஞ்சியுள்ள தொகையை அதற்கடுத்த 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.
3. கொள்முதல்தாரர் தான் கோரும் விலையில் 10% தொகையை விண்ணப்பத்துடன் செலுத்து வேண்டும் இது மேற்குறிப்பிட்டுள்ள எண்.2-ல் கூறியபடி முன் வைப்பு தொகையான 25% தொகையில் சரி செய்யப்படும்.
4. மேற்குறிப்பிட்ட எண். (2)-ல் குறிப்பிட்டுள்ள படி தொகையை செலுத்த தவறினால் விண்ணப்பத்துடன் செலுத்திய 10% தொகை உட்பட ஏற்கனவே செலுத்திய தொகைகள் பறிமுதல் செய்யப்படும்.
5. ஈடுபெற்ற கடனளித்த நிறுவனம் விலைக்கோரலை ஏற்றுக் கொள்ளாவிட்டால் விண்ணப்பத்துடன் செலுத்திய 10% தொகை நிதி நிறுவனத்தின் கொள்கையின் படி எவ்வித வட்டியும் இன்றி திருப்பி தரப்படும்.
6. கொள்முதல்தாரர் ஏலத்திற்கு நேரடியாக வந்து தானே அதில் கலந்து கொள்வதோடு தான் தனக்காகதான் ஏலம் கோருவதாக எழுத்து மூலமாக அறிக்கை அளிக்க வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட பிறர் இதில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
7. சொத்தானது ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ தற்போது இருக்கக்கூடியவையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவையுமான அனைத்து வில்லங்கங்களுடனே விற்பனை செய்யப்படுகிறது. எனவே, எந்த மூன்றாம் தரப்பு உரிமைகோரல்களுக்கும் / உரிமைகளுக்கும் / நிலுவைகளுக்கும் அதிகாரப்பூர்வ அலுவலர் / ஈடுபெற்று கடனளித்த நிறுவனம் பொறுப்பில்லை.
8. கொள்முதல்தாரர் சொத்து (தனிப்பட்ட முறையில் விற்பனைக்கு விடப்படுவது) தொடர்பாக தனக்கு நிறைவு ஏற்படும் வகையில் அனைத்து கோணங்களிலும் தீர விசாரித்துக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக பின்னர் எந்த உரிமை கோரலையும் அதிகாரப்பூர்வ அலுவலரிடம் / ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்திடம் எழுப்ப கொள்முதல்தாரருக்கு உரிமை இல்லை.
9. எந்த காரணத்தையும் முன்வைக்காமல் எந்த விலை கோரலையும் நிராகரிக்க சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் நிறுவனத்திற்கு உரிமை உண்டு.
10. சொத்தை வாங்குவதற்கான முத்திரை தீர்வை, பதிவு கட்டணம், இதர செலவுகள், வரிகள், தீர்வைகள் அனைத்தும் கொள்முதல்தாரரது சாரும்.
11. தனிப்பட்ட முறையிலான இந்த விற்பனையானது SARFAESI சட்டத்திற்கு / விதிகளுக்கு கட்டுப்பட்டது.

தேதி : 31.10.2023
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006. தொலைபேசி : 044 - 28332115,
இணையதளம் : www.tvsholdings.com மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com CIN : L35999TN1962PLC004792

30 செப்டெம்பர் 2023 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.09.2023	30.09.2022	31.03.2023	30.09.2023	30.09.2022	31.03.2023
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த வருமானம்	484.59	549.96	2,206.72	10,619.78	8,971.74	33,690.33
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	98.38	35.33	235.97	727.68	556.89	1,924.47
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	96.64	63.28	326.69	725.94	584.75	2,013.32
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	82.98	49.14	273.11	457.31	394.28	1,333.17
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம்]	82.54	49.42	276.48	469.04	410.53	1,399.02
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	10.12	10.12	10.12	10.12	10.12	10.12
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	700.43	-	-	3,230.87
8	பங்கு பிரீமியம் கணக்கு	36.42	36.42	36.42	36.42	36.42	36.42
9	நிகர மதிப்பு	1,405.98	2,971.23	697.28	6,442.75	5,372.92	5,898.84
10	நிலுவையில் உள்ள கடன் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக)	-	726.63	669.61	-	2,847.06	3,795.31
11	நிலுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்	873.03	NA	2,346.92	873.03	NA	2,346.92
12	கடன் சம விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக, விதிவிலக்கான வகைகள் உட்பட) (மடங்கு)	NA	0.24	0.93	3.44	2.12	3.75
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்)						
	(அ) அடிப்படை	41.01	24.29	134.99	112.65	104.91	321.10
	(ஆ) டைல்யூட்டட்	41.01	24.29	134.99	112.65	104.91	321.10
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	- பொருந்தாது -					
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	- பொருந்தாது -					
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	NA	1.58	2.49	3.79	3.70	3.60
17	வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	NA	6.29	8.53	8.19	11.67	11.57
18	நடப்பு விகிதம் (மடங்கு)	0.49	0.96	0.95	1.02	0.99	0.89
19	நீண்ட கால கடன் விகிதம் செயல்பாட்டு மூலதனத்திற்கு (மடங்கு)	-	9.39	10.14	2.80	2.97	3.16
20	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வராக்கடன் விகிதம் (மடங்கு)	-	-	-	-	-	-
21	நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு)	0.98	0.63	0.60	0.64	0.61	0.65
22	மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு)	0.36	0.33	0.30	0.60	0.54	0.61
23	கடனாளிகளின் சுழற்சி விகிதம் (மடங்கு)	10.84	7.02	7.30	33.28	19.76	23.71
24	சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (மடங்கு)	6.55	2.98	3.11	8.75	10.81	9.91
25	செயல்பாட்டு இலாப விகிதம் (%)	12.05	12.48	12.00	13.07	12.85	12.66
26	நிகர இலாப விகிதம் (%)	10.80	5.13	8.27	4.31	3.88	3.69

குறிப்புகள் :
1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.tvsholdings.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133 மற்றும் அதன் கீழான விதிகள் மற்றும் கம்பெனிகள் (இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு) 2015 விதிகளின்படி மேற்கண்ட தனித்த மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
சுதர்சன் வேணு
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 30.10.2023